# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

# அசல் வழக்கு எண். 67/2013

**வா.சா.1-** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை - நாள் - 18-02-2026

பெயர் = அசோகன்

**வா.சா.-1** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி பிரதிவாதிகள் தரப்பில் கு.வி.-

(1) தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு தகவல் கொடுத்தது நான்தான் என்றால் நானும், எனது அம்மாவும் தகவல் கொடுத்தோம். எனது அம்மாவிற்கு எழுத படிக்கத் தெரியாது என்றால் சரிதான், கையெழுத்து மட்டும் போடுவார். தாவா சொத்துக்களில் எனக்கு உரிமை உள்ளது என்று காண்பிப்பதற்கு எவ்வித ஆதாரத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன், எனது அம்மா எழுதிக்கொடுத்த உயிலை தாக்கல் செய்துள்ளேன். எனது அம்மா உயிருடன் உள்ளாரா என்றால் உயிருடன்தான் உள்ளார். எனது தாயார் தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ள வக்காலத்திலும், பிராதிலும் கையெழுத்து போடாமல் கைரேகை தான் வைத்துள்ளார் என்றால் சாட்சி மேற்படி இரண்டு ஆவணங்களை பார்த்துவிட்டு கைரேகைதான் வைத்துள்ளார், வயது முதிர்ச்சியின் காரணமாக கைரேகை வைத்தார் என்று சாட்சியமளித்தார்.

(2) தாவா சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு வா.சா.ஆ.3 ஆவணத்தைத் தவிர வேறு ஆவணம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 உயில் ஆவணம் எழுதும்போது நான் உடனிருந்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை எழுதுவதற்கு ஆவண எழுத்தருக்கு நான்தான் தகவல் சொன்னேன் என்றால் சரிதான், சாட்சி தன்னிச்சையாக எனது தாயாரும் உடனிருந்தார் என்று சாட்சியமளித்தார். வா.சா.ஆ.2 ஆவணம் எழுதும்போது மேற்படி ஆவணத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான்.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.18 15:57:29 +0530

வா.சா.ஆ.2 ஆவணத்தை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொத்து விபரத்தில் ஜிஆர் சர்வே எண்ணோ, நத்தம் சர்வே எண்ணோ, டவுண் சர்வே எண்ணோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

(3) வா.சா.ஆ.2 ஆவணத்திலுள்ள சொத்து விபரத்திற்கு சர்வே எண் காண்பிப்பதற்காக தொடர்புபடுத்தும் ஆவணத்தை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணத்திலுள்ள சொத்து விபரத்திற்கு சர்வே எண் காண்பிப்பதற்காக தொடர்புபடுத்தும் ஆவணத்தை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக தாக்கல் செய்திருப்பதாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 3 ஆவணத்தில் 2 ம் தாளில் பிரதி என்று குறிப்பிட்டுள்ளதால் மேற்படி ஆவணம் அசல் அல்ல பிரதிதான் என்றால் சரியல்ல, அசல்தான். மேற்படி ஆவணத்தில் பிரதி என்று குறிப்பிட்டுள்ளதால் மேற்படி ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்தை எழுதி வைத்தவர் உயிருடன் இருப்பதால் மேற்படி ஆவணம் சட்டப்படி ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றால் சரிதான்.

(4) தாவா சொத்துக்களுக்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லாததால் தாவா வழக்கில் பிராது தாக்கல் செய்யவோ, சாட்சியமளிக்கவோ எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 முதல் 7 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்காக சித்தரிக்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 ஆவணத்தில் 1ம் வாதியின் பெயர்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு சரிதான் என்று சாட்சியமளித்தார். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 ஆவணம் வழக்கிற்கு பிந்தையது என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு சரிதான் என்று சாட்சியமளித்தார். மேற்படி வா.சா.ஆ-9 ஆவணத்தில் எனது பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

(5) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.11 ஆவணத்தில் எனது பெயர் குறிப்பிடவில்லை என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு எனது அம்மாவின் பெயர்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சாட்சியமளித்தார். நான் தாக்கல் செய்துள்ள பிராது வரைபடத்தில் EG=CF தென்வடல் 45 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு சரிதான் என்று சாட்சியமளித்தார். மேற்படி வரைபடத்தில் E புள்ளிக்கு தெற்கே G வரையுள்ள

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.18 15:57:35 +0530

இடம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு சரிதான் என்று சாட்சியமளித்தார். மேற்படி வரைபடத்தில் பிரதிவாதியின் சொத்திற்கு நான்கு பக்க அளவுகளை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

(6) தாவா வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். மேற்படி எதிர்வழக்குரையில் தாவா சொத்து 06.12.1937 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் சின்னம்புளியம்பட்டி நாடார் உறவின் முறை பொதுவிற்காக கிரையம் வாங்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியும். மேற்படி 06.12.1937 கிரைய ஆவணத்தை நகல் எடுத்து படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி கிரைய ஆவணத்தின் மூலமாக பிரதிவாதிகள் தென்வடலாக 19 தச்சுக்கம்பு இடத்தை கிரையம் பெற்றதாக குறிப்பிட்டுள்ளது தெரியுமா என்றால் அது எனக்கு தேவையற்றது. அருப்புக்கோட்டை டவுண் சர்வே எண்.164 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன் என்றால் சரிதான்.

(7) என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.10 ஆவணத்தில் சர்வே எண்.164 க்கு மேற்குபுற தென்வடல் அளவு 15.4 மீட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு FMB யில் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சாட்சியமளித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.10 ஆவணத்தில் சர்வே எண்.164 க்கு கிழக்குபுற தென்வடல் அளவு 8.2 மற்றும் 7.6 மீட்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு FMB யில் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சாட்சியமளித்தார். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.10 ஆவணத்தில் டவுண் சர்வே எண்.164 க்கு வடக்கே நான் பிராதில் கோரியபடி தென்வடல் 36 அடி அளவு வருவதற்கான மீட்டர் அளவுகள் குறிப்பிடவில்லை என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு சரியல்ல என்று சாட்சியமளித்தார்.

(8) வா.சா.ஆ.10 ஆவணத்தின்படி பார்க்கும்போது பிரதிவாதிகளின் இடத்தில் மேற்கு பக்கம் 5 1/2 அடியும், கிழக்கு பக்கம் 5 3/4 அடியும் ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர், சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலருடன் வந்து பார்வையிட்டார் என்றால் சரிதான்.

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.18 15:57:41 +0530

நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட பின்பு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபணை எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் தரப்பிலும் ஆணையர் அறிக்கை சரியில்லை என்று ஆட்சேபனை தாக்கல் செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன்.

(9) நீதிமன்ற ஆணையர் அவரது வரைபடத்தில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் மொத்த சொத்தின் தென்வடல் அளவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆணையர் அவரது வரைபடத்தில் வாதிகளின் மொத்த சொத்தின் தென்வடல் அளவையும், பிரதிவாதிகளின் மொத்த சொத்தின் தென்வடல் அளவையும் குறிப்பிட்டிருந்தால் வழக்கை தீர்மானிப்பதற்கு உகந்ததாக அமையும் என்றால் ஆணையர் அறிக்கையை சரியாகத்தான் தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தை அளவீடு செய்யும்போது நான் பிரதிவாதியின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக கண்டறியப்பட்டது என்றால் சரியல்ல. நான் ஆணையர் சரியாகத்தான் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியமளித்துள்ளதால் ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை பெயரளவில்தான் தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை, 1 அடி வர வேண்டும், ஆனால் 3/4 அடி உள்ளதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

(10) நான் தாக்கல் செய்துள்ள ஆணையர் அறிக்கை ஆட்சேபனையில் 7 வது பாராவில் தாவா 2 வது இலக்க சொத்தை ஆணையர் தவறுதலாக பாதை என்று காண்பித்திருக்கிறார், ஆனால் தாவா 2 வது இலக்க சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்ட கூரையடி இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆட்சேபனை பாரா 9 ல் ஆணையர் அவருக்கு நீதிமன்றம் அளித்த வாரண்ட்டை முழுமையாக புரிந்து கொள்ளாமல், அரைகுறையான அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆணையர் அறிக்கைக்கு தாக்கல் செய்த ஆட்சேபனையில் குறிப்பிட்டுள்ள அனைத்து விபரங்களும் சரியானது என்று ஒப்புக் கொள்கிறேனா என்றால் ஒப்புக்கொள்கிறேன். தாவா சொத்தை மறுபடியும் ஆணையர் நியமிக்கப்பட்டு, பார்வையிட்டு தாவாவை

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.18 15:57:47 +0530

தீர்மானிக்கத்தக்க வகையில் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்வதில் எனக்கு விருப்பம் உள்ளதா என்றால் அது தேவையில்லாத ஒன்று.

(11) வா.சா.ஆ.4 மற்றும் 6 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள சுவர்கள் அனைத்தும் சிமெண்ட் கலவையால் பூசாமல் உள்ளது என்றால் சரிதான். எனது வழக்கை நிரூபிக்க ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை தவிர்த்து வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கில் என்னை தவிர வேறு யாரையும் சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் விசாரிக்கத் தேவையில்லை. பிரதிவாதிகளை தாவா வழக்கில் சின்னம்புளியம்பட்டி நாடார் உறவின்முறையின் பிரதிநிதி என்ற முறையில்தான் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். தாவா வழக்கில் பிரதிவாதிகளை பிரதிநிதியாக சேர்ப்பதற்கு தமுக்கடித்து விளம்பரம் செய்தேனா அல்லது நாளிதழில் விளம்பரம் செய்தேனா என்றால் நாளிதழில் விளம்பரம் செய்தேன்.

(12) 1ம் பிரதிவாதியின் இறப்பிற்கு பின்பு 2, 3 பிரதிவாதிகளை சின்னம்புளியம்பட்டி நாடார் உறவின்முறை பிரதிநிதியாக தாவா வழக்கில் சேர்த்தேன் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகளை தாவா வழக்கில் சேர்த்த பின்பு மேற்படி பிரதிவாதிகளை சின்னம்புளியம்பட்டி நாடார் உறவின்முறை பிரதிநிதியாக சேர்ப்பதற்கு ஆட்சேபனை உள்ளதா என்று தமுக்கடித்து விளம்பரம் செய்யவில்லை என்றும், நாளிதழில் விளம்பரம் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு நிலுவையிலுள்ளபோது 3ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி இறப்பிற்கு பின்பு வேறு பிரதிவாதிகளை இவ்வழக்கில் சேர்ப்பதற்கு நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். அருப்புக்கோட்டை சின்னம்புளியம்பட்டி நாடார் உறவின்முறை உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் சம்மந்தமாக நான் சட்டப்படியான சம்பிரதாயங்களை கடைபிடிக்காததால் இந்த வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

(13) வழக்கிற்கு சில மாதங்களுக்கு முன்பு 3வது இலக்க சொத்தில் நிலைக்கதவு வைக்க முயற்சித்தபோது எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால் 1972ம் வருடமே நிலைக்கதவு இருந்தது. வா.சா.ஆ.2 ஆவணத்திலேயே தெற்குமாலாக சின்னம்புளியம்பட்டி கிராமம், நாடார்கள் ஊர் பொது மனைக்கும் வடக்கு என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், நான்

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.18 15:57:53 +0530

சொல்வதுபோல் 4வது இலக்கமான பொதுப்பாதையை தெற்குமாலாக காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். வருவாய் ஆவணங்களிலும் 4வது இலக்க சொத்தை பாதை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் தாவா சொத்து எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

(14) நான் சரியான தகவல்களுடன் பிராதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், இரண்டாவதாக தாக்கல் செய்திருக்கிறேன். தாவா சொத்து அனைத்துமே பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட டவுண் சர்வே எண்.164ல்தான் உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 மற்றும் 11 ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யும்போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தை 25.11.2023ல்தான் பெற்றேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கான காரணத்திற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு எனது தாயாரின் வயது இருக்கும் என்றால் சரியல்ல, என் வயதுதான் இருக்கும். 1ம் பிரதிவாதி வயதானவர் என்பதால், அவர் அடியாட்களுடன் வந்து அத்துமீறி சுவர் கட்டினார் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல, அடியாட்களுடன் வரவில்லை, உறவின்முறை உறுப்பினர்களுடன் வந்தார்.

(15) 1ம் பிரதிவாதி சாந்தமானவர் என்றும், அவர் சட்டவிரோதமான செயல்களை செய்யமாட்டார் என்றும், சட்டவிரோதமான செயல்களை செய்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானோ, எனது தாயாரோ 1ம் பிரதிவாதி மீதோ, உறவின்முறை மீதோ காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 3வது இலக்க சொத்து எனது பிராது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள 2ம் வாதி வீடு என்று சொல்லப்படும் கதவு எண்.16 மற்றும் 17க்குரியதுதான் என்றால் சரிதான். பிராது வரைபடத்தில் 2ம் வாதியின் வீட்டிற்கு மேற்கே வீரபத்தரன் செட்டியார் தெருவை நோக்கி மேற்குபார்த்து வாசல் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(16) நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் மற்றும் கூடுதல் நிரூபண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகளை நான்தான் எனது வழக்கறிஞருக்கு சொன்னேன் என்றால் சரிதான். எனது கூடுதல் நிரூபண வாக்குமூலத்தை ஆணையர் அறிக்கையின் குறைகளை குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், தனியாக ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேன்.

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.18 15:58:00 +0530

ஆணையர் அறிக்கையில் பக்கம் 4ல் 3வது வரியில் தெற்கே செவல் கண்மாய் மருகால் ஓடை மற்றும் கிழமேல் தெரு என்று வாரண்டில் காட்டப்பட்டுள்ளதில் தெற்கே ஓடை என எந்தவொரு அறிகுறியும் இல்லை என்று ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் அவ்வாறு ஆணையர் குறிப்பிட்டது தவறு.

(17) எனது வழக்கு சங்கதிகள் அனைத்தும் பொய்யானது என்றும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கு சங்கதிகளுக்கு ஆதரவாக இல்லை என்றும், என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்று சொன்னாலும், வழக்கு கோரிக்கை எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னாலும் சரியல்ல.பிரதிவாதிகள் அப்பாவி பொதுஜனங்கள் என்பதால் எதிராக வழக்காட மாட்டார்கள் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.18 15:58:06 +0530